//வணிகவரித்துறை//

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு ச. கிருஷ்ணன், இ.ஆ.ப.,<br>வணிகவரி ஆணையர் ,<br>சேப்பாக்கம், சென்னை – 5. | தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம்<br>பிலிம் சேம்பர் வளாகம்,<br>606, அண்ணாசாலை, சென்னை–6. |

<u>கடிதஎண்.ஏ.மு / சட்டக் குழு–4 /11943/ 2011, நாள் 08 –04–.2011</u>

அய்யா,

பொருள்: கேளிக்கை வரி – புதிய தமிழ் திரைப்படங்களின் தலைப்பு முழு கேளிக்கை வரி விலக்குச் சலுகை பெற தகுதியானதா என்பது குறித்து ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு – திரைப்படங்கள் தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளது என ஆய்வு செய்து பரிந்துரை வழங்கியது – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.72, வணிகவரி (ம) பதிவுத்துறை நாள் 22.07.2006
2) அரசாணை (நிலை) எண்.147, வணிகவரி (ம) பதிவுத்துறை நாள் 20.11.2006
3) அரசாணை (நிலை) எண்.159, வணிகவரி (ம) பதிவுத்துறை நாள் 22.08.2007.
4) அரசுக் கடித எண்.5315/சி1/2011–1 நாள் 08–04–2011

------

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் அரசாணைகளில் திரைப்படத் துறைக்கும், தமிழ் மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில் புதிய திரைப்படங்களுக்கு தமிழிலேயே பெயர் சூட்டப்படுமானால் அத்திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டது.

பார்வை மூன்றில் காணும் அரசாணையில் அமைக்கப்பட்ட குழுவானது கீழ்க்கண்ட தமிழ்த் திரைப்படம் முழு கேளிக்கை வரிச் சலுகை பெற அத்திரைப்படத்தின் தமிழ் தலைப்பு, தமிழ்ப் பண்பாட்டிற்கு உகந்ததாகவும் கண்ணியமானதாகவும் உள்ளது என பரிந்துரை செய்துள்ளது. எனவே, பார்வை 4–ல் கண்ட அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, கீழ்க்கண்ட 2 திரைப்படங்களும் முழு கேளிக்கை வரி சலுகை பெறத் தகுதியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | திரைப்படத்தின் பெயர் |
|---|---|
| 1 | அரும்பு மீசை குறும்பு பார்வை |
| 2 | மாப்பிள்ளை |

ஒம்/– ச. கிருஷ்ணன்
வணிகவரி ஆணையர்

நகல்

1) அரசு செயலாளர்,
   வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
   தலைமை செயலகம், சென்னை–9.
2) தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு
   தலைமை செயலகம், சென்னை–9.
3) அனைத்து இணை ஆணையர்கள்(வணிகவரி) மற்றும் (செயலாக்கம்)
4) இணை ஆணையர் (வவ), கணிப்பொறி மையம், சென்னை–6.
   (இணைய தளத்தில் மற்றும் வலைதளத்தில் வெளியிடவும்)
5) திரு. நியூ லைன் டாக்கீஸ், 118, இந்திரா நகர், இந்தியன் வங்கி மேல் மாடி,
   ஆர்காட் ரோடு, வளசரவாக்கம், சென்னை–87
6) திரு. நேமிசந்த் ஜபக், கீழ்த்தளம், "பி" கபாக்ஸ் கேசில் , புதிய எண்.6,
   பழைய எண்.40, சர்குலர் ரோடு, யுனைடெட் இந்தியா காலனி,
   கோடம்பாக்கம், சென்னை–600 024.
7) கோப்பிற்கு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மக்கள் தொடர்பு அலுவலர்